செய்தி வெளியீடு எண்:450 நாள்:15.07.2021

செய்தி வெளியீடு

**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அண்ணா சாலையில் உள்ள காமராஜர் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.**

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரைப் பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.07.2021) மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, பெருந்தலைவர் காமராஜரைப் போற்றிடும் வகையில், 2006ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அன்னாரின் பிறந்தநாளான ஜூலைத் திங்கள் 15ஆம் நாளினைக் ‘கல்வி வளர்ச்சி நாள்’ என அறிவித்ததோடு, அதற்கான அரசாணையும் 24.5.2006 அன்று வெளியிடப்பட்டது. அந்தக் கல்வி வளர்ச்சி நாள் எதிர்காலத்தில் மாற்றப்பட்டுவிடக்கூடாது என்பதனைக் கருத்திற்கொண்டு, அதனைச் சட்டமாகவும் நிறைவேற்றினார்கள். அதனடிப்படையில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளானது கல்வி வளர்ச்சி நாளாகத் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

அனைவரும் கல்வி கற்றிட வேண்டும் என்கிற பெருந்தலைவர் காமராஜரின் உன்னத நோக்கத்தினை நிறைவேற்றிடும் வகையில், முதல் கல்வி வளர்ச்சி நாளான 15.7.2006 அன்று இரண்டு வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டத்தினையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இரண்டாவது கல்வி

வளர்ச்சி நாளான 15.7.2007 அன்று சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கிடும் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தினார்கள். மேலும், மூன்றாவது ஆண்டு கல்வி வளர்ச்சி நாளான 15.7.2008 அன்று முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை வாழைப்பழம் வழங்கிடும் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தி, ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாகத் திகழ்ந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜருக்கு மணிமண்டபமும் உருவாக்கினார். சென்னையில் உள்ள கடற்கரைச் சாலைக்குக் காமராஜர் சாலை என்று பெயர் சூட்டப்பட்டதோடு, சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. மேலும், பள்ளிச் சிறார்களுக்குக் கண்ணொளித் திட்டம், மாணாக்கர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை உள்ளிட்ட பல்வேறு சீர்மிகுத் திட்டங்களை அறிமுகப்படுத்திச் செவ்வனே செயல்படுத்தப்பட்டது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, பள்ளிக் கல்வியின் தரத்தினை உலகத் தரத்திற்கு இணையாக வழங்கிட உறுதி பூண்டுள்ளது.

விருதுபட்டி என்ற விருதுநகரில் குமாரசாமி - சிவகாமி அம்மையார் தம்பதியருக்கு மகனாக 15.07.1903ஆம் ஆண்டு பிறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், காங்கிரஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் வரதராஜூலு நாயுடு அவர்களின் அறிமுகத்தால் பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் 1919 முதல் பங்குகொண்டார். 1930இல் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். 1954இல் குடியாத்தம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொடர்ந்து 9 ஆண்டுகள் சீரிய முறையில் பணியாற்றி மக்கள் மனங்களில் நிறைந்தார்.

1960இல் 11ஆம் வகுப்பு வரை ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தினார். மேலும், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். மாணவர்கள் கல்வி பயில்வதற்காகத் தமிழகமெங்கும் அதிக அளவில் பள்ளிக்கூடங்களை நிறுவி, பள்ளி மாணவர்களிடையே சமத்துவத்தை உணர்த்திட, இலவசச் சீருடைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார்.

வாய்மை, தூய்மை, நேர்மை, தொண்டாற்றல் போன்றவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்ததால் ‘கர்ம வீரர்’ என்றும் ‘பெருந்தலைவர்’ என்றும் தென்னாட்டுக் காந்தி, படிக்காதமேதை என்றும் காமராஜர் அவர்கள் மக்களால் போற்றப்படுகிறார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் மறைவுக்குப் பின் ஒன்றிய அரசு அவருக்கு 1976இல் ‘பாரத ரத்னா’ என்ற உயர்ந்த விருதை வழங்கிக் கௌரவித்தது. 1976 ஜூலை 15ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜர் நினைவு அஞ்சல் தலை, சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெளியிடப்பட்டது.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9